## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## ஒன்பதாம் பத்து

### ஒன்பதாம் திருவாய்மொழி - மல்லிகை
### தலைவி தனது ஆற்றாமையால் வருந்தியதைக் கூறும்
### பாசுரத்தாலே தமது பிரிவுத் துன்பத்தை ஆழ்வார் தெரிவித்தல்

** மல்லிகை கமழ் தென்றல் ஈரும் ஆலோ! *
வண் குறிஞ்சி இசை தவழும் ஆலோ! *
செல் கதிர் மாலையும் மயக்கும் ஆலோ! *
செக்கர் நல் மேகங்கள் சிதைக்கும் ஆலோ! **
அல்லி அந்தாமரைக் கண்ணன் எம்மான் *
ஆயர்கள் ஏறு அரி ஏறு எம் மாயோன் *
புல்லிய முலைகளும் தோளும் கொண்டு *
புகல் இடம் அறிகிலம் தமியம் ஆலோ! 1

புகல் இடம் அறிகிலம் தமியம் ஆலோ! *
புலம்புறு மணி தென்றல் ஆம்பல் ஆலோ! *
பகல் அடு மாலை வண் சாந்தம் ஆலோ! *
பஞ்சமம் முல்லை தண் வாடை ஆலோ! **
அகல் இடம் படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து
அளந்து * எங்கும் அளிக்கின்ற ஆயன் மாயோன் *
இகல் இடத்து அசுரர்கள் கூற்றம் வாரான் *
இனி இருந்து என் உயிர் காக்கும் ஆறு என்? 2

இனி இருந்து என் உயிர் காக்கும் ஆறு என்? *
இணை முலை நமுக நுண் இடை நுடங்க *
துனி இருங்கலவி செய்து ஆகம் தோய்ந்து *
துறந்து எம்மை இட்டு அகல் கண்ணன் கள்வன் **
தனி இளம் சிங்கம் எம் மாயன் வாரான் *
தாமரைக் கண்ணும் செவ்வாயும் * நீலப்
பனி இருங்குழல்களும் நான்கு தோளும் *
பாவியேன் மனத்தே நின்று ஈரும் ஆலோ! 3

பாவியேன் மனத்தே நின்று ஈரும் ஆலோ! *
வாடை தண் வாடை வெவ்வாடை ஆலோ! *
மேவு தண் மதியம் வெம்மதியம் ஆலோ! *
மென்மலர்ப் பள்ளி வெம்பள்ளி ஆலோ! **
தூவி அம்புள் உடைத் தெய்வ வண்டு
துதைந்த * எம் பெண்மை அம்பூ இதாலோ! *
ஆவியின் பரம் அல்ல வகைகள் ஆலோ! *
யாம் உடை நெஞ்சமும் துணை அன்று ஆலோ! 4

யாம் உடை நெஞ்சமும் துணை அன்றாலோ! *
ஆ புகும் மாலையும் ஆகின்றாலோ! *
யாம் உடை ஆயன் தன் மனம் கல் ஆலோ! *
அவனுடைத் தீங்குழல் ஈரும் ஆலோ! **
யாம் உடைத் துணை என்னும் தோழிமாரும் *
எம்மின் முன் அவனுக்கும் ஆய்வர் ஆலோ! *
யாம் உடை ஆர் உயிர் காக்கும் ஆறு என்? *
அவன் உடை அருள் பெறும் போது அரிதே 5

அவன் உடை அருள் பெறும் போது அரிதால் *
அவ்வருள் அல்லன அருளும் அல்ல *
அவன் அருள் பெறும் அளவு ஆவி நில்லாது *
அடு பகல் மாலையும் நெஞ்சும் காணேன் **
சிவனொடு பிரமன் வண் திருமடந்தை *
சேர் திரு ஆகம் எம் ஆவி ஈரும் *
எவம் இனிப் புகும் இடம்? எவன் செய்கேனோ? *
ஆருக்கு என் சொல்லுகேன்? அன்னைமீர்காள்! 6

ஆருக்கு என் சொல்லுகேன்? அன்னைமீர்காள்! *
ஆர் உயிர் அளவு அன்று இக்கூர் தண் வாடை *
கார் ஒக்கும் மேனி நம் கண்ணன் கள்வம் *
கவர்ந்த அத்தனி நெஞ்சம் அவன் கணஃதே **
சீர் உற்ற அகிற்புகை யாழ் நரம்பு *
பஞ்சமம் தண் பசுஞ்சாந்து அணைந்து *
போர் உற்ற வாடை தண் மல்லிகைப் பூப் *
புது மணம் முகந்து கொண்டு எறியும் ஆலோ! 7

புது மணம் முகந்து கொண்டு எறியும் ஆலோ! *
பொங்கு இள வாடை புன் செக்கர் ஆலோ! *
அது மணந்து அகன்ற நம் கண்ணன் கள்வம் *
கண்ணனிற் கொடிது இனி அதனில் உம்பர் **
மது மண மல்லிகை மந்தக் கோவை *
வண் பசுஞ்சாந்தினில் பஞ்சமம் வைத்து *
அது மணந்து இன் அருள் ஆய்ச்சியர்க்கே *
ஊதும் அத்தீங்குழற்கே உய்யேன் நான் 8

ஊதும் அத்தீங்குழற்கே உய்யேன் நான் *
அது மொழிந்து இடை இடைத் தன் செய் கோலத் *
தூது செய் கண்கள் கொண்டு ஒன்று பேசித் *
தூ மொழி இசைகள் கொண்டு ஒன்று நோக்கி **
பேதுறு முகம் செய்து நொந்து நொந்து *
பேதை நெஞ்சு அறவறப் பாடும் பாட்டை *
யாதும் ஒன்று அறிகிலம் அம்ம! அம்ம! *
மாலையும் வந்தது மாயன் வாரான் 9

மாலையும் வந்தது மாயன் வாரான் *
மா மணி புலம்ப வல் ஏறு அணைந்த *
கோல நன்னாகுகள் உகளும் ஆலோ! *
கொடியன குழல்களும் குழறும் ஆலோ! **
வாலொளி வளர் முல்லை கருமுகைகள் *
மல்லிகை அலம்பி வண்டு ஆலும் ஆலோ! *
வேலையும் விசும்பில் விண்டு அலறும் ஆலோ! *
என் சொல்லி உய்வன் இங்கு அவனை விட்டே? 10

** அவனை விட்டு அகன்று உயிர் ஆற்ற கில்லா *
அணி இழை ஆய்ச்சியர் மாலைப் பூசல் *
அவனை விட்டு அகல்வதற்கே இரங்கி *
அணி குருகூர்ச் சடகோபன் மாறன் **
அவனி உண்டு உமிழ்ந்தவன் மேல் உரைத்த *
ஆயிரத்துள் இவை பத்தும் கொண்டு *
அவனியுள் அலற்றி நின்று உய்ம்மின் தொண்டீர்! *
அச்சொன்ன மாலை நண்ணித் தொழுதே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---